செங்கல்பட்டு மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளிடம் குறை கேட்பு கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துக்கொண்டு மனுக்களை பெற்று பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வீ.தமிழ்மணி, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் எல்.இதயவர்மன், நகர மன்ற தலைவர்கள் ஜெ.சண்முகம், எம்.கே.டி.கார்த்திக் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று 5 ஆம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு

அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 214 புதிய பேருந்துகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, மே 8 -

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று ஐந்தாம் ஆண்டு தொடக்கவிழாவை முன்னிட்டு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில், 214 புதிய பேருந்துகள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று நான்காண்டுகள் நிறைவடைந்து, ஐந்தாம் ஆண்டு தொடக்கவிழாவை முன்னிட்டு, நேற்று (7.5.2025) சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில், 214 புதிய பேருந்துகளின் சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் உள்ள ஏழை, எளிய, நடுத்தர மற்றும் அனைத்து பொதுமக்களுக்கு இன்றியமையாத பொதுப் போக்குவரத்துச் சேவைகளை, எட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் வாயிலாக, குறைந்த கட்டணத்தில் அரசு வழங்கி வருவதோடு, அனைத்து கிராமப்பகுதிகளுக்கும் பேருந்து பயண வசதியை ஏற்படுத்தி மாநிலம் முழுவதும் தடையற்ற போக்குவரத்து சேவையை அளித்து வருகிறது.

பொது மக்களின் தேவைக்கேற்ப புதிய பேருந்து வழித்தடங்களை தொடங்கி வைத்தல், புதிய பேருந்துகளை அறிமுகப்படுத்தல், பழைய பேருந்துகளை புதுப்பித்தல், பேருந்து பணிமனைகளை மேம்படுத்துதல், பணிச்சுமையை குறைக்கும் விதமாக நவீன இயந்திரங்கள் அறிமுகப்படுத்தல், பணியாளர்களுக்கான ஓய்வு அறைகளை மேம்படுத்தல் போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

இந்த சேவைகளால், மகளிர், மாணவ, மாணவியர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் உதவியாளர்கள், திருநங்கைகள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், தமிழ் அறிஞர்கள், மொழிப் போர் தியாகிகள், மூத்த குடிமக்கள் மற்றும் குறிப்பிட்ட இதர பிரிவினருக்கு கட்டணமில்லா பயணச்சலுகை வழங்கப்படுகிறது.

சாதாரண நகர கட்டண பேருந்துகளில் மகளிர் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொள்வதற்காக தொடங்கப்பட்ட "மகளிர் விடியல் பயணம் திட்டம்" மூலம் 684 கோடி பயண நடைகள் மேற்கொள்ளப்பட்டன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற நான்காண்டுகளில், தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும், பயணிக்கும் பயணிகளின் வசதிக்காக, 3,727 புதிய பேருந்துகளும், 1500 பேருந்துகள் புதுப்பி க்கப்பட்டும் பயன்பாட்டில் உள்ளன.

இதன் தொடர்ச்சியாக, நேற்று (7.5.2025) சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 27 புதிய அதிநவீன சொகுசு பேருந்துகளையும், விழுப்புரம் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 114 புதிய பேருந்துகளும், சேலம் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 10 புதிய பேருந்து களும், கோயம்புத்தூர் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 31 புதிய பேருந்துகளும், மதுரை அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 14 புதிய பேருந்து களும், திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 18 புதிய பேருந்துகளும் என மொத்தம் 214 புதிய பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

இந்த 214 புதிய பேருந்துகளில், மகளிரின் சிறப்பான வரவேற்பினை பெற்ற "மகளிர் விடியல் பயணத் திட்டத்திற்காக" 70 நகரப் பேருந்துகளும் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பேருந்துகளின் சேவைகளை தொடங்கிவைத்த முதலமைச்சர் அவர்கள், பேருந்தில் ஏறி பேருந்தினை பார்வையிட்ட பிறகு, விடியல் பயணம் திட்டத்தில் மூலம் பயன் பெறும் பெண்களுக்காக முறையாக பேருந்து நிறுத்தத்தில் பேருந்துகளை நிறுத்தி அவர்களை ஏற்றிச் செல்ல வேண்டும் என்று நடத்துனர் மற்றும் ஓட்டுனர்களிடம் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி. சிவ சங்கர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமோழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, ஆ.ராசா, தயாநிதி மாறன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, போக்குவரத்துக் கழகங்களின் மேலாண் இயக்குநர்கள், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நேற்று (07.05.2025) தமிழ்நாடு அரசின் சார்பில் திராவிட மொழிகளின் "ஒப்பியல் அறிஞர் இராபர்ட் கால்டுவெல்" அவர்களின் 211வது பிறந்த நாளையொட்டி, சென்னை மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் உயர் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

மகளிர் விடியல் பயணத்திட்டம் குறித்து

முதல்வர் மு.க.ஸ்டாலின் பேருந்தில் பயணித்து மகளிரிடம் உரையாடல்!

மாதம் ரூ.2 ஆயிரம் வரை சேமிக்க முடிகிறது என மகளிர் உற்சாகம்!

சென்னை, மே 8 –

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மாநகரப் பேருந்தில் பயணம் செய்து "மகளிர் விடியல் பயணத் திட்டம்" குறித்து பயணிகளிடம் உரையாடினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு நேற்று (7.5.2025) பொறுப்பேற்று நான்காண்டுகள் நிறைவு பெற்று, ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

நேற்று (7.5.2025) தலைமைச் செயலகம் வருகைத்தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தலைமைச் செயலகத்திலிருந்து சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற உள்ள விழாவிற்கு செல்லும் வழியில், சென்னை வள்ளலார் நகரிலிருந்து விவேகானந்தர் இல்லம் வரை செல்லும் 32B மாநகரப் பேருந்தில் அரசினர் தோட்டம் அருகில் உள்ள ஓமந்தூரார் பேருந்து நிறுத்தத்திலிருந்து பயணம் செய்து முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற முதல் நாள் அறிவித்த 5 திட்டங்களில் ஒன்றான "மகளிர் விடியல் பயணம் திட்டத்தின்" கீழ் பேருந்துகளில் பயணம் செய்த பயணிகளிடம் உரையாடினார்.

அப்போது, பேருந்தில் பயணம் மேற்கொண்ட பெண் பயணிகள் இந்த மகத்தான திட்டமான "மகளிர் விடியல் பயணம் திட்டம்" மூலம் நாங்கள் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொண்டு வருவதால், நேரத்திற்கு வேலைக்கு செல்ல முடிகிறது என்றும், இதனால், மாதம் 2000 ரூபாய் வரையில் சேமித்து வைக்க முடிகிறது என்றும், அந்த சேமிப்புத் தொகையிலிருந்து தங்கள் பிள்ளைகளுக்கான படிப்பு செலவுகளுக்கும், மருத்துவ செலவுகள் மற்றும் இதர செலவுகளுக்கும் பயன்படுத்துகிறோம் என்பதையும் தெரிவித்து, இத்திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருவதற்கும் உடனிருந்தனர்.

சமூக நீதியின் சரித்திரப் பயணம் தொடரட்டும்!

'திராவிட மாடல்' அரசின் 5 ஆம் ஆண்டை ஆதித்தமிழர் பேரவை பெருமையோடு வரவேற்கிறது!

இரா.அதியமான் அறிக்கை!

சென்னை, மே 8 -

தமிழ்நாட்டில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தி.மு. கழக ஆட்சி கடந்த 4 ஆண்டுகள் நிறைவடைந்து ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைத்து தலை நிமிர்ந்த வளர்ச்சித் திட்டங்களால் மீண்டும் அரியணையில் அமர வைக்கும் வாய்ப்பை மக்கள் வழங்கத் தயாராகி விட்டார்கள் என்பதை ஆதித்தமிழர் பேரவை பெருமையோடு வரவேற்கிறது என ஆதித் தமிழர் பேரவை தலைவர் இரா.அதியமான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தி.மு.கழக அரசு கடந்த நான்காண்டுகளில் மதிப்பிட்டுக் கூறும் அளவிற்கு பல்வேறு நலத் திட்டங்களையும் நிறைய மாற்றங்களையும் எண்ணற்ற வளர்ச்சித் திட்டங்களையும் தொலைநோக்கு பார்வையுடன் சிறப்பான முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

இந்தியாவிலேயே முன்னோடித் திட்டமாக பெண்கள் அரசு பேருந்துகளில் இலவச பயணம் மேற்கொள்ள "மகளிர் விடியல் பேருந்துத் திட்டம்". பெண்களுக்கு மாதம் ரூ.1000 வீதம் சுமார் 1.25 கோடி பெண்கள் பயனடையும் "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை" வழங்கும் வெற்றித் திட்டம்.

நாள்தோறும் 20.73 லட்சம் குழந்தைகள் பயன்பெறும் "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" தினால் பள்ளி வருகை, கற்றல் ஆர்வம், வகுப்பறை கவனிப்பு, திறன்கள் மேம்பாடு. 90% குழந்தைகளுக்கு பாட நினைவாற்றல், எழுத்து, வாசிப்பு, பேச்சுத் திறன் உயர்வு என மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அதே சமயம் திராவிட சித்தாந்தத்தால் தமிழ்நாட்டின் கல்வியில் தொழில் நுட்பத்தில் தொழிற்துறையில் மருத்துவத்துறையில் இன்று நாம் பெற்றிருக்கும் முன்னேற்றம் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட முடியாத அளவிற்கு மிகுந்த முன்னேற்றம் கண்டிருக்கிறது என்பதை கடந்த நான்காண்டுகளில் நாம் அறிந்து கொள்ள முடிந்திருக்கிறது

சுயமரியாதையும் பகுத்தறிவையும் கூர்மைபடுத்தியிருக்கும் இவ்வரசு சாதி மத வேறுபாடுகளைக் கடந்து சகோதரத்துவம் சமதர்மம் என அர்ப்பணித்துக் கொண்டு எல்லோருக்கும் எல்லாம் என்று எல்லா வளர்ச்சித் திட்டங்களும் அனைத்து தரப்பு மக்களிடம் சேர்க்கும் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு 2026 லும் 200+ என்ற இலக்கைத் தொட்டு சமூக நீதியின் சரித்திரம் தொடரட்டும் என வாழ்த்துவதோடு அரசின் ஐந்தாம் ஆண்டு தொடக்கத்தை ஆதித்தமிழர் பேரவை மனதார வரவேற்கிறது என்பதை மகிழ்ச்சியோடு கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

எஸ்.முரளி தலைமையில் – மயிலை கிழக்கு பகுதி தி.மு.க சார்பில்

நாடு போற்றும் நான்காண்டு! தொடரட்டும் பல்லாண்டு! சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம்!

மயிலை த.வேலு, திண்டுக்கல் ஐ.லியோனி, தமிழச்சி தங்கபாண்டியன், கோ.வி.லெனின் சிறப்புரை!

சென்னை, மே 8-

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்கு பகுதி தி.மு.க சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத்தலைவர் அவர்களின் நாடு போற்றும் நான்காண்டு! தொடரட்டும் பல்லாண்டு!! சாதனை விளக்க மாபெரும் பொதுக் கூட்டம் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி தலைமையில் இன்று (8.5.2025- வியாழக்கிழமை) மாலை 6.00 மணி அளவில் நொச்சிகுப்பம், நொச்சிநகர், மயிலாப்பூர், சென்னை - 28 இல் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு திண்டுக்கல் ஐ.லியோனி, மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, தொகுதி பார்வையாளர் கோ.வி.லெனின் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி, எஸ்.முனுசாமி சீமன்கோ.சேகர் பி.எல்.தாஸ், ஏ.குமாரி, எல்.உதயகுமார், ஏ.தாஸ், மா.பா.அன்பு, வி.வெற்றிவேல், கோ.கண்ணன், பா.பொன்னுசாமி, துரைப்பார்த்திபன், விமலாகிருஷ்ணமூர்த்தி எம்.சி., கீதாமுரளி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மு தம்பிதுரை, வட்ட செயலாளர் அ.தவநேசன், அ.ரேவதி எம்.சி. வரவேற்கின்றனர்.

ஆ.சந்திரசேகர், நந்தனம் வேதா, கோடம்பாக்கம் மு.சத்யா, கே.மலர், என்.அன்பழகன், சு.வில்லவன், கோ.சு.மணி, வேலு சம்பந்தம், மந்தைவெளி அ.பாபு, செல்வி சௌந்தரராஜன், யோகேஷ்ரவி,

எம்.ஆறுமுகம், அ.வாசுதேவன், ஜெ.ஜானகிராமன், ஜி.டி.அம்பேத்கார், எஸ்.மோகன், நந்தனம் நம்பிராஜன், மு.தம்பிதுரை, சி.தசரதன், பக்கலை கதிரவன், டங்டர்ஜெ. அருண், ஜி.ஆர்.இராஜேந்திரன், ஆர்.எல்.வி.அசோக்குமார், பா.பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன், ஜி.முருகையன்,

மயிலை மேற்கு பகுதி வட்டசெயலாளர்கள் டி.ராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார், அ.நாகராஜன், மு.இ.ஏழுமலை மூ.இராஜேந்திரன்,

மாவட்ட அமைப்பாளர்கள், ராஜா அன்பழன் எஸ்.சரவணன், மயிலை ஆர்.பாலு, ஆர்.கதிரவன் சி.கணேஷ்பாண்டியன் எஸ்.பானுசலீம், கே.மோனிஷா, விஜய் வெங்கடேசன், பூலியூர் டி.மோசஸ், ம. ஆனந்தன், ச.சண்முகநாதன், சாந்தோம் ஆ. அந்தோணி, ஜெ.ஜெகன் ராஜ், ஆர்.குமரன், ஏ.சத்தியமூர்த்தி, டாக்டர் கோ.சக்திவிக்னேஷ், என்.எஸ்.பாலசுப்பிரமணி, என்.வடிவேல், இரா.சக்கரவர்த்தி, கே.வெங்கட்ராமன், பி.கே.ராஜேஷ்கண்ணா போட்டோ மதன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

த.விக்னேஸ்வரன், சா.ராஜீ, மூ.உதயசூரியன், ஸ்டோன் வீ.அருண் குமார், என்.வி.லோகநாதன், தா.வின்சென்ட், ம.ஜெயக்கோபி, டி.மோகன்ராஜ், பி.ரமேஷ், ஆர்.கலை சேகரன், வி.விஜய்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இரா.செந்தில்குமார் தலைமை ! நாடு போற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு!

இராயபுரம் கிழக்கு பகுதியில் கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

அத்திப்பட்டு சாம்ராஜ் சிறப்புரை ! ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி - ஐட்ரிம் இரா.மூர்த்தி பங்கேற்பு!

சென்னை, மே 08-

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி சார்பில் நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு கழக அரசின் சாதனை விளக்க பொதுக் கூட்டம் இன்று (8.5.2025 வியாழக்கிழமை) மாலை 6.00 மணியளவில் பாஷியம் தெரு சுழல் மெத்தை அருகில் 49(அ) வட்டம் இராயபுரம், செ13ல் நடைபெறுகிறது.

இராயபுரம் கிழக்கு பகுதிச்செயலாளர் இரா.செந்தில்குமார் தலைமை வகிக்கிறார்.

வ.பெ.சுரேஷ், த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, லோ.மோகன், காட்டன் ஜி.சதிஷ்குமார், க.கலைசெல்வன், ஆர்.வி.கணேஷ், என்.கிருஷ்ணன், க.கோவிந்தராஜ், பி.கண்ணன், எஸ்.சுரேஷ், எம்.என்.வெங்கட், அத்தோ பி.முனுசாமி, வி.குமார், ஐசிஎப் பழனி, என்.பாரி, கே.லட்சுமணன், ஆகியோர் வரவேற்கின்றனர்.

எம்.கே.இஸ்மாயில் கு.ரமேஷ், சு.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், இரா.பாலன், எம்.ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர் பி.முருகன், பாலாலட்சுமணன், ஜெ.கௌரீஸ்வரன், இரா.பொன்முடி, ந.குமார், எஸ்.யுவராஜ், ஏ.அன்வர், எம்.பாலாஜி, பிரியாணி பாலா, ஆர்.டி.ஜெய்சங்கர், எஸ்.மொய்தீன்,

கூட்டத்தில் கழக பேச்சாளர் அத்திப்பட்டு சாம்ராஜ் சிறப்புரையாற்றுகிறார்.மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

தா.இளையஅருணா, பி.டி.பாண்டிசெல்வம், ந.மனோகரன், வண்ணைபுகாரி, ஆர்.வெற்றிவீரன், எஸ்.ஆர்.கமலகண்ணன், மு.கோபி, க.நாகம்மை, வி.தயாளன், வே. சிவக்குமார், கி.இராஜேந்திரன், நா.சண்முகம், லயோலா கே. மதன், பி.சோமசுந்தர மூர்த்தி, எல்.சீனிவாசன், மா.தாஸ், இரா.மருது பாண்டியன், சு.சேகர், க.சேகரன், ஜி.உமாபதி, லயன் எம்.தீனதயாளன், பி.செந்தில்குமார், கார்த்திக்செங்குட்வன், லியோடி.சுரேஷ், ஏ.ரமேஷ்பாபு, வி.லட்சுமிவேல், எஸ்.குமார், ஆர்.ராஜன், ஜி.எஸ்.முருகன், க.சுரேஷ், எம்.டி.மதன்ராஜ் யு.அனிபா, எஸ்.ஆன்ட்ரு, செட்டி மு.சந்திரன், புலவர் செல்வராஜ், கே.எஸ்.குமார், எஸ்.மணிகண்டன், பி.பிரபாகரன், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

பி.சேகர் நன்றி கூறுகிறார்.

4 ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் - கலைஞர் பிறந்தநாள் விழா!

மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்!

பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் அறிக்கை!

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. ஆலோசனைக் கூட்டம் மாத்தூர் எம்.எம்.டி.ஏ. 19 வது வட்டம், மாத்தூர் எம்.எம்.டி.ஏ. இரண்டாவது பிரதான சாலையில் அமைந்துள்ள ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அவர்களின் அறிவுறுத்தலின்படி இன்று (08.05.2025 - வியாழக்கிழமை) மாலை 5 மணிக்கு, துவங்கும் இக்கூட்டத்திற்கு பகுதி அவைத் தலைவர் வி.திராவிடவீரன் தலைமை தாங்குகிறார்.

19 வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

பகுதிக் கழக நிர்வாகிகள் கே.சிவசங்கரன், ஆ.ராஜேந்திரன், எஸ்.கௌரி, ஆர்.முரளி, கவுன்சிலர் க.காசிநாதன், பி.தரணி, பி.நிர்மல்குமார், கே.செல்வன், நா.மோகன் குமார் நாகூரார், வி.கார்த்திகேயன், பா.சந்திரன், கே.ராஜா, வட்டச் செயலாளர்கள் கே.அங்குசாமி, இ.கண்ணப்பன், கே.கருணாகரன், பி.எஸ்.சந்துரு, வி.ஆர்.குப்பன், நந்தினி சண்முகம் ஆகியோர் முன்னிலை வைக்கிறார்கள்.

கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம், ஜூன் 3 முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா, 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசனை செய்ய நடைபெறும் இக்க கூட்டத்தில், மாதவரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக செயல்வீரர்கள், பொது உறுப்பினர்கள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

புழல் எம்.நாராயணன்

செயலாளர் - மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க.